பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண் : 214** **நாள் : 24.12.2018**

**சென்னை மாவட்டத்திலுள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்காத மாற்றுத்திறனாளிகள், தங்களின் விவரங்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தெரிவித்தால், அவர்களின் இருப்பிடத்திற்கே சென்று படிவம்–6யினை பூர்த்தி செய்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படும் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.**

இந்திய தேர்தல் ஆணையம் மற்றும் தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அலுவலர் ஆகியோரின் அறிவுரைப்படி, சென்னை மாவட்டத்திலுள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வாக்காளர்களில் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு தேர்தலின்போது தேவையான வசதிகளை சிறப்பாக ஏற்படுத்தித் தருவதற்காக, அவ்வாறு எவ்வளவு வாக்காளர்கள் உள்ளனர் என்ற விவரத்தை சேகரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

எனவே, சென்னை மாவட்டத்திலுள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள் தாமாகவோ அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலமாகவோ தங்களுடைய முகவரி மற்றும் வாக்காளர் அடையாள அட்டை விவரங்களை பெருநகர சென்னை மாநகராட்சி கட்டணமில்லா தொலைபேசி எண்.1913ல் தொடர்பு கொண்டு தெரிவிக்க கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

இதுநாள்வரை வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கவில்லை என்றாலும், தம்முடைய விவரங்களைத் தெரிவித்தால் வாக்குச்சாவடி நிலை அலுவலர், அவர்களது இருப்பிடத்திற்குச் சென்று படிவம்–6ஐ வழங்கி பூர்த்தி செய்து வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்திட ஆவண செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி மாற்றுத்திறன் குறித்த விவரங்கள் ரகசியமாக வைக்கப்படும் எனவும், தேர்தல் நேரத்தில் சிறப்பான சேவை அளிப்பதற்காகவே மேற்படி விவரங்கள் சேகரிக்கப்படுகின்றது எனவும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**